தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 100/பேரூ/2022

நாள் 04.08.2022

திரு. V. செந்தமிழ்சேகர்,
கானம் கஸ்பா, தூத்துக்குடி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கானம் பேரூராட்சி, தூத்துக்குடி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், எண்.7/88A மேலத்தெரு, கானம் கஸ்பா, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V. செந்தமிழ்சேகர் என்பவரின் 12.04.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.04.2022ல் பெறப்பட்டு, 100/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், எண்.7/88A மேலத்தெரு, கானம் கஸ்பா என்ற முகவரியைச் சேர்ந்த திரு. V. செந்தமிழ்சேகர் என்பவர் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், கானம் பேரூராட்சி, மேலக்கானம் புதுமனை, பழைய வார்டு–1, தற்போது வார்டு எண்.6ல் புதுமனை வடக்குத் தெருவில் கடந்த 30 ஆண்டுகாலமாக பொதுமக்கள் குடிநீர் பயன்பாட்டிற்காக கானம் பேரூராட்சி நிர்வாகத்தின் நிதியின் மூலம் அமைக்கப்பட்டு, பொது மக்கள் பயன்பாட்டில் இருந்துவந்த அடிபம்பினை அதே பகுதியில் பட்டாணி சாமி கோவில் நிர்வாக கமிட்டி தலைவரான த. இராமச்சந்திரன் நாடார் என்பவர் சட்டவிரோதமாக சேதப்படுத்தி திருடியதோடு அல்லாமல் மேற்படி அடிபம்பு இருந்த இடம் தெரியாத வகையில் மறைப்பதற்காக பட்டாணி சாமி கோவில் எல்லை சுவரினை எழுப்பி ஆக்கிரமித்துவிட்டார் என்றும் எனவே அரசின் சொத்தினை சேதப்படுத்தியும் திருடியும், பொது இடத்தினை ஆக்கிரமிப்பு செய்தும் அரசிற்கு இழப்பு

ஏற்படுத்தியதற்கு திரு. இராமச்சந்திரன் நாடார் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுத்தும், வார்டு மக்களுக்கு மீண்டும் அத்தியாவசிய தேவைக்கான குடிநீர் அடிபம்பை நிறுவிடவும் உரிய நடவடிக்கை எடுத்திட விசாரணை மேற்கொண்டு ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகாருக்கு ஆதாரமாக தனியரால் ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்னர் அடிபம்பின் புகைப்படத்தினையும், பின்னர் அடிபம்புபை ஆக்கிரமித்து கோவில் வளாக சுற்றுச்சுவர் எழுப்பப்பட்ட நிலையில், பொது மக்கள் உபயோகிக்க இயலாத நிலையில் அடிபம்பு கோவில் வளாகத்தினுள் இருப்பதற்கான புகைப்பட ஆதாரம், மனுதாரர் இதுகுறித்து முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அளித்திருந்த மனுவிற்கு கானம் பேரூராட்சி செயல் அலுவலரால் 28.4.2022ல் வழங்கப்பட்டுள்ள பதிலறிக்கையின் நகல் ஆகியவற்றினை இணைத்தனுப்பியுள்ளார்.

2. கானம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் 12.07.2022 அன்று தூத்துக்குடி முகாமில் நடைபெறவுள்ள நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 04.07.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. மனுதாரர் மற்றும் கானம் பேரூராட்சி செயல் அலுவலர் இருவரும் இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

மனுதாரர் திரு. வெ. செந்தமிழ்சேகர் அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் “தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், கானம் பேரூராட்சி வார்டு எண்.6 (பழைய எண்.1) பொது மக்கள் பயன்பாட்டிற்காக ஆழ்குழாய் அடிபம்ப் 30 ஆண்டுகளுக்கு முன்பு நிறுவப்பட்டு நல்ல நிலையில் இயங்கிவந்தது. பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்த மேற்கண்ட பம்பினை பட்டாணிசாமி கோவில் நிர்வாகி திரு. த. இராமச்சந்திரன் நாடார் என்பவரால் அப்புறப்படுத்தப்பட்டு மேற்கண்ட அடி பம்ப் இருந்த காம்பவுண்ட் சுவரையும் இடித்து ஆக்கிரமிப்பு செய்து அவரது எல்லையை விரிவுபடுத்திக்கொண்டார். எனவே, மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்றி, முன்னர் இருந்தவாறு பொது மக்கள் பயன்பெறும் வகையில் அடிபம்பை ஆக்கிரமித்த திரு. T. இராமச்சந்திரன் நாடார் அவர்கள் சொந்த செலவில் அமைத்துத்தர ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான புகைப்பட நகலினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

3. கானம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ப. வேல்சாமி அளித்துள்ள வாக்குமூலத்தில் “மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள கானம் பேரூராட்சி வார்டு எண்.1 புதுமனை வடக்குத் தெருவில் அமைந்திருந்த அடிபம்ப் அகற்றப்பட்டது தொடர்பாக அங்குள்ள பொதுமக்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட விசாரணையில் மேலகானம் பட்டாணிசாமி கோவில் முன்பாக அடிபம்ப் அமைக்கப்பட்டது. மேற்கண்ட அடிபம்ப் தற்போதும் உள்ளது. ஆனால், மேற்கண்ட அடிபம்ப் கோவில் திருவிழாவின்போது மட்டுமே உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மனுதாரர் கூறியுள்ள புகார் உண்மைக்கு புறம்பானதாகும். மனுதாரர் தனிப்பட்ட காரணங்களால் பொய்யான புகார்களை அனுப்பிவருகிறார் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் தனது புகார் குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அவர்களுக்கு அளித்துள்ள நாளிடப்படாத புகார் மனுவில் "அடிபம்பு பட்டாணிசாமி கோவிலுக்கு செந்தமிழ் சேகராகிய தான் தலைவராக இருந்த காலத்தில் அமைத்துக்கொடுத்தது என பொய்யான தகவலையும், அந்த அடிபம்பை உபயோகப்படுத்தும் புதுமனை தெரு மக்களை கலந்துகொள்ளாமல் மேலக்கானம் பகுதியில் உள்ள அடிபம்பை திருடி ஆக்கிரமித்த திரு. ராமச்சந்திரன் நாடார் அவர்களின் ஆதரவாளர்களிடம் மட்டுமே போலியான கையெழுத்தை வாங்கி அந்த அடிபம்பு கோவில் உபயோகத்திற்காக மட்டுமே போடப்பட்டது என தற்போதைய வார்டு உறுப்பினரிடமும், பட்டாணிசாமி கோவில் நிர்வாகி திரு. ராமச்சந்திரனிடமும் வாக்குமூலம் பெற்று தனது மனுவினை நிராகரித்துள்ளார் என்றும், இந்த அடிபம்பானது தான் தலைவராக இருந்த காலத்தில் போடப்பட்டதல்ல என்றும், அதற்கு முன்னர் தலைவராக இருந்த திரு. டி. சந்திரராஜன் அவர்களால் புதுமனை மக்களின் குடிநீர் உபயோகத்திற்காக பேரூராட்சி நிதியிலிருந்து போடப்பட்டதாகும்; கடந்த கால பேரூராட்சி கூட்ட தீர்மான பதிவேட்டினைப் பார்வையிட்டால் இது தெரியவரும் என்றும், மேற்படி அடிபம்பானது வனத்துறைக்குச் சொந்தமான இடத்தில் வனபாதுகாப்புக் குழு பொதுமக்களின் குடிநீர் தேவைக்காக அமைக்கப்பட்டதென்றும், அடிபம்ப் அமைந்துள்ள இடம் பட்டாணிசாமி கோவிலுக்குச் சொந்தமான இடம் கிடையாது என்றும், வனத்துறைக்கு சொந்தமான இடமென்றும், பட்டாணிசாமி கோவில் என்பது ஊர் பொது கோவில் கிடையாது எனவும், அது தற்போது பஞ்சாயத்து குடிநீர் அடிபம்பை ஆக்கிரமித்து திரு. டி. ராமச்சந்திரன் நாடார் கட்டிய குடும்ப கோவிலாகும் எனவும், மேற்படி கோவில் 20 வருடத்திற்குள்ளாகவே கட்டப்பட்டதாக இருக்கும் என்றும், கோவிலின் புகைப்படத்தைப் பார்த்தால் உண்மை புலப்படும் என்றும், புகைப்படத்தில் கோவில் சுற்றுச் சுவர் உள்ளதும், அதற்கு வெளிப்பகுதியிலேயே குடிநீர் பம்ப் உள்ளதும் நன்றாகவே துலங்கும் என்றும், கோவில் தேவைக்காக மேற்படி அடி பம்பை கோவில் வளாகத்திற்குள் பாதுகாப்பாக இருக்கும் வகையில் சுற்றுச்சுவர் கட்டி வைத்திருப்பதாக சொல்வது நகைப்புக்குரியது. செயல் அலுவலர் முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் விதமாக ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் நோக்கத்தோடு விசாரணை செய்து குற்றவாளியான திரு. ராமச்சந்திரன் நாடார் அவர்களை காப்பாற்றுகின்ற வகையில் தனது மனுவினை நிராகரித்துள்ளார் எனவும், வேலியே பயிரை மேயும் பழமொழியைப் போல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அதிகாரியே குற்றவாளிக்கு துணைபோவதாக தோன்றுகிறது என்றும், இப்பிரச்சனையில் செயல் அலுவலரும் விசாரிக்கப்படவேண்டிய குற்றவாளியே என்றும், அவர் சட்டத்திற்கு புறம்பாக கையூட்டு பெற்றுக்கொண்டு சரியான முறையில் விசாரணை செய்யவில்லை என்றும், முறையற்ற செயல் புரிந்து பேரூராட்சியின் அனுமதியில்லாமல் பேரூராட்சி பொது பயன்பாட்டிற்கான அடி பம்பினை சுற்றுச்சுவர் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ள திரு. டி. ராமச்சந்திரன் நாடார் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும் மனுதாரர் தனது புகார் மனுவில் கேட்டுக்கொண்டுள்ளார்".

5. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், புகைப்படங்கள், வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட கூடுதல் ஆவணங்கள் கானம் பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் அவரால் அளிக்கப்பட்ட கூடுதல் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக்

கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் அளித்துள்ள புகார் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்டுள்ள புகைப்படம் ஆகியவற்றின்படி கானம் பேரூராட்சி, மேலக்கானம், புதுமனை, பழைய வார்டு எண்.1, தற்போது வார்டு எண்.6, புதுமனை வடக்குத் தெருவில் அமைக்கப்பட்டுள்ள அடிபம்ப் பட்டாணிசாமி கோவில் சுற்றுச்சுவருக்கு வெளியில் அமைந்துள்ளதும், பின்னர் கோவில் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்ட பின்னர் அடிபம்பானது கோவில் வளாகத்தினுள் உள்ளதும் தெளிவாகிறது.

- அடிபம்ப் புதுமனை மக்களின் குடிநீர் உபயோகத்திற்காக பேரூராட்சியின் நிதியிலிருந்து போடப்பட்டதென்றும், இதற்கான ஆதாரம் பேரூராட்சியின் கடந்த கால கூட்ட தீர்மானங்களை பார்வையிட்டால் தெளிவாக தெரியுமென்றும், மேற்படி அடிபம்பானது வனத்துறைக்குச் சொந்மான இடத்தில் வனபாதுகாப்புக் குழு பொது மக்களின் குடிநீர் தேவைக்காக அமைக்கப்பட்டதென்றும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மேலும் பட்டாணிசாமி கோவில் என்பது ஊர் பொது கோவில் கிடையாது என்றும், அக்கோவில் திரு. டி. ராமச்சந்திரன் நாடார் அவர்களின் குடும்ப கோவிலாகுமென்றும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவிற்கு கானம் பேரூராட்சி செயல் அலுவலர், இணை இயக்குநர் (பொது), சென்னை அவர்களுக்கு அளித்துள்ள பதிலறிக்கையில் பட்டாணிசாமி கோவில் இடத்தில் ஆழ்குழாய் அடிபம்பு மனுதாரர் பேரூராட்சி தலைவராக இருந்தபோது அமைக்கப்பட்டது என்றும், அடிபம்பின் பாதுகாப்பு நலன் கருதி கோவில் வளாகத்தோடு சேர்த்து சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது என்றும், அடிபம்பிற்காகும் பராமரிப்புச் செலவுகள் அனைத்தையுமே கோவில் நிர்வாகமே மேற்கொண்டு வருகின்றது என்றும், இது குறித்து ஊர் பொது மக்களிடம் விசாரணை மேற்கொண்டபோது, அடிபம்பு கோவில் உபயோகத்திற்காக போடப்பட்டது என்றும், பாதுகாப்பாக கோவில் வளாகத்திற்குள் பாதுகாக்கப்பட்டு வருகிறது எனவும், மேலகானம் தெருவில் குடிநீர் பிரச்சனை ஏதும் இல்லை என வார்டு உறுப்பினர் மற்றும் ஊர் பொதுமக்கள் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றும் தெரிவித்து, மனுதாரரது புகார் மனுவினை செயல் அலுவலர் நிராகரித்துள்ளது புலப்படுகிறது. இது முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுவிற்கு அளித்துள்ள பதிலறிக்கைக்கும், இம்முறைமன்ற விசாரணையின்போது கானம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள வாக்குமூலத்திற்கும் சம்மந்தமில்லாமல் முரணாக உள்ளது.

**6.** இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணைக்குப் பின் கானம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள **28.7.2022** நாளிட்ட கூடுதல் அறிக்கையில் கானம் பேரூராட்சி பழைய வார்டு எண்.**1**, புதிய வார்டு எண்.**8** மேலகானம் பட்டாணிசாமி கோவில் அருகிலிருந்த ஆழ்குழாய் அடிபம்பினை சுற்றி கட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, பழைய நிலைக்கே தற்போது கொணரப்பட்டுள்ளது என்றும், ஆழ்குழாய் அடிபம்பு நல்ல நிலைமையிலேயே உள்ளதென்றும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அடிபம்பு

பொது மக்கள் உபயோகத்திற்காக பழைய நிலைக்கே கொண்டுவரப்பட்டுள்ளதற்கான புகைப்பட ஆதாரங்களையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு இணைத்தனுப்பிவைத்துள்ளார்.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், கானம் பேரூராட்சியால் பொது மக்களின் குடிநீர் தேவைக்காக பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ள அடிபம்ப் கோவில் வளாகத்திற்குள் அமைந்துள்ளது குறித்தும் அந்த ஆழ்குழாய் அடிபம்பினை பொது மக்கள் உபயோகத்திற்காக மீள கொண்டுவருமாறு மனுதாரர் தனது புகார் மனுவில் முன்வைத்த கோரிக்கை கானம் பேரூராட்சி செயல் அலுவலரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மேற்கண்ட அடிபம்பினை ஆக்கிரமித்து சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டிருந்த கோவில் சுற்றுச்சுவர் ஆக்கிரமிப்பு தற்போது அகற்றப்பட்டு, அடிபம்ப் அதன் முந்தைய நிலைக்கே கொணரப்பட்டு, பொது மக்களின் உபயோகத்திற்காக மீள மீட்டெடுக்கப்பட்டுள்ளது. மேலும், அடிபம்பானது நல்ல நிலைமையிலேயே உள்ளதென்றும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டபின் அடிபம்பின் தற்போதைய நிலை குறித்த புகைப்படங்களின் அடிப்படையிலும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

எனினும், இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையின்போது தெரிவித்த கருத்துக்கு மாறாக கானம் பேரூராட்சி செயல் அலுவலரின் முந்தைய அறிக்கை இருந்ததும், அடிபம்ப் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார்மனு அளித்ததற்கு பின்னரே அடிபம்ப் ஆக்கிரமிக்கப்பட்டு கோவில் சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டிருந்தது அகற்றப்பட்டு, அடிபம்பானது அதன் பழைய நிலைக்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, பேரூராட்சி பொது நிதியில் பொருத்தப்பட்ட அடிபம்ப் கோவிலுக்காக அமைக்கப்பட்டதாக தவறான தகவல்களை வழங்கியும், அதனை உரிய ஆவணங்கள் இன்றி மூடிமறைக்க முற்பட்டுள்ள கானம் பேரூராட்சி செயல் அலுவலரின் பொய்யான வாக்குமூலம் கண்டனத்திற்குரியது. இதற்குக் காரணமான செயல் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு தகுந்த தண்டனைகளை வழங்கிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இனிவரும் காலங்களில், பொதுமக்களின் கோரிக்கைகள் குறித்து ஆவணங்களைக் கொண்டு ஆய்வு செய்யாமல் முரண்பட்ட அறிக்கைகளை வழங்குவதை தவிர்த்திடுமாறும், உரிய ஆவணங்களை ஆய்வு செய்து சரியான தகவல்களுடன் பதிலறிக்கை அனுப்புவதில் சீரிய முறையில் கடமையாற்றிடவும் கானம் பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 4–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. வெ. செந்தமிழ்சேகர், எண்.7/88, மேலத் தெரு, கானம் கஸ்பா,
திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்–628 201

செயல் அலுவலர், கானம் பேரூராட்சி, கானம், தூத்துக்குடி மாவட்டம்–628 201
பேரூராட்சிகளின் மண்டல உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி
பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28
இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

செயலர்